ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2358/65 - 2023 නොවැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2023.11.17

*2358/65 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 4/81* (II)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

24இ மற்றும் 24ஈ என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 24இ மற்றும் 24ஈ ஆம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சுற்றாடல் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் “முத்துராஜவெல சூழல் பாதுகாப்புப் பிரதேசம்” என அழைக்கப்படும் பிரதேசம் தொடர்பாக மற்றும் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் 13 ஆந் திகதிய 1466/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்சொல்லப்பட்ட பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணை II மற்றும் அட்டவணை III இனை இத்தால் பின்வருமாறு திருத்துகின்றேன் :-

(1) அதற்கான அட்டவணை II இன் விடயம் 18 இனை உடனடுத்துப் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் :-

“19. சூழல் பாதுகாப்புப் பிரதேசத்தின் தெற்கு எல்லை வழியாக நுகபேே சந்திக்கான கெரவலபிட்டிய உப மின்கட்டமைப்பு நிலையத்திலிருந்து 33 கிலோ வாட் இரட்டைச் சுற்று குறுக்கு மின் கடத்துகை வழி.”.

(2) அதற்கான அட்டவணை III இல்-

(அ) அதன் (ச) எனும் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் :-

“(ச) கருத்திட்ட உத்தேசங்களின் செயல்முறைப்படுத்தலை மதிப்பீடு செய்வதற்கும் கருத்திட்டச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்குமென நிருவாக அறவீட்டுத் திட்டமொன்று மத்திய சூழல் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்படும்.”.

(ஆ) அதன் விடயம் (ச) இனை உடனடுத்துப் பின்வரும் விடயத்தினைச் சேர்ப்பதன் மூலம் :-

"(ஞ) நுகப்பே சந்திக்கான கெரவலபிட்டிய உப மின்கட்டமைப்பு நிலையத்திலிருந்து 33 கிலோ வாட் இரட்டைச் சுற்று குறுக்கு மின் கடத்துகை வழியின் நிர்மாணிப்பு, தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு என்பன சூழல் பாதுகாப்பு இடப்பிரதேசத்தின் மீது பாதகமான விளைவினை ஏற்படுத்துதலாகாது.".

**கெஹெலிய ரம்புக்வெல்ல,**
*சுற்றாடல் அமைச்சர்.*

கொழும்பு,
*2023*, நவெம்பர் 07.

EOG *11-0178*